# உலகமயமாதற் சூழலில் கோயிற் திருவிழாக்கள்: நல்லூர் கந்தசாமி கோயிலை அடிப்படையாகக் கொண்ட- சமகால அவதானிப்பு


தி.செல்வமனோகரன்,
விரிவுரையாளர்,
சைவசித்தாந்தத்துறை,
யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம்.
tselvan@univ.jfn.ac.lk



*ஆய்வுச்சுருக்கம்*

*காலனிய, பின்காலனிய காலங்களினூடாக வளர்முகநாடுகள் உலகமயமாக்கலுக்கு உள்ளாக்கப்பட்டன. அவை தாமாகவே உலகமயமாதலுக்கு உள்ளாகியும் வருகின்றன. பொருளாதாரச் செயல் நிலையை அடிப்படையாகக் கொண்டதாக உலகமயமாதல் நிகழ்ந்திருந்தாலும் அது உலகநாடுகளை அவற்றின் அரசியல், சமூக, கலை, கலாசார சமய, தத்துவ, பண்பாட்டுக்கூறுகளிலும் மிகுந்த செல் வாக்கைச் செலுத்தியது. இந்நாடுகளின் மொழி, சமயம், கலாசாரம் உள்ளிட்டவை நேரடியாகவும் மறைமுகமாகவும் இவற்றின் மீது திணிக்கப்படுகின்றது. பன்முகத் தன்மையற்ற ஒற்றைத்தன்மையான அடையாளங்கள் உருவாகின்றன. இது அதிகார ஆதிக்க அடிப்படையிலானதே தவிர மக்களை ஒற்றுமைப்படுத்துவதையே நோக்கமாகக் கொண்டதல்ல. இந்தப் பின்னணியில் சீனாவில் உருவானதாகக் கருதப்படும் கோவிட் - 19 வைரஸ் உலகெங்கும் பரவி அனைத்து நாடுகளையும் சுகாதார ரீதியாக முடக்கி அனைத்துவகையான நெருக்கீடுகளையும் கடந்த இருவருடங்களாக ஏற்படுத்தி வருகிறது. அந்தவகையில் மனித வாழ்வோடு பின்னிப்பிணைந்துள்ள சமய வாழ்வில் உலகமயமாதற் பின்னணியில் உருவான கொரோனா வைரஸின் மூலம் ஏற்பட்டிருக்கக் கூடிய தாக்கத்தை ஆய்வுக் கட்டுரை ஆராய்கிறது. இதற்கு மாதிரியாக யாழ்ப்பாணம் நல்லூர்க்கந்தசுவாமியாலய 2020, 2021 காலப்பகுதித் திருவிழாக்கள் எடுத்தாளப்பட்டுள்ளன. இந்த ஆய்வியலில் ஆய்வுமுறையியல்களாக விவரண ஆய்வு, வரலாற்றுமுறை ஆய்வு என்பன பிரதான முறையியல்களாகப் பயன்படுத்தப் பட்டுள்ளன. கோவிட் - 19 பற்றிப்பல ஆய்வு கள் சுகாதார, பொருளாதார, அரசியல் நெருக்கீடுகள் சார்ந்து வெளிவந்துள்ள போதும் சமய அடிப்படையிலான தாக்கங்கள் பெரிதும் வெளிவரவில்லை. அந்த அடிப்படையில் இந்த ஆய்வுக் கட்டுரை உலகமயமாதற் செயற்பாட்டின் விளைவான கொவிட் - 19 இன் தாக்கத்தால் சமயவாழ்வில் ஏற் பட்டிருக்கக் கூடிய தாக்கங்களை நல்லூர்க் கந்தசாமி ஆலயத்திருவிழாக்களை அடிப்படையாகக் கொண்டு ஆராய்கின்றது.*



*திறவுச்சொற்கள் :- திருவிழா, உலகமயமாதல், கொரோனா, சமயம்*


## அறிமுகம்

உலகமயமாதல் எனும் சொல் இன்று ஜனரஞ்சகப் பெருவெளியில் சாதாரணமாகப் பயின்று வருகிறது. அதேவேளை அச்சொல் அதற்கான முழு அர்த்தப் புரிதலோடுதான் பயன்படுத்தப்படுவதாகக் கருதி விடமுடியாது. உலகமயமாக்கலானது சுதந்திர வர்த்தகம் மூலம் பொருட்களையும் பணிகளையும் பரிமாற்றம் செய்வதாகவும் மக்கள் இடப்பெயர்வு (மனிதவள இடப்பெயர்வு) அடைந்து பொருளாதார மேம்பாட்டை உருவாக்குதல், மூலதனத்தை உருவாக்குதல், தொழில் நுட்பத்தைக் கொணர்தல் என்பவற்றை உள்ளடக்கியதாகும். சுருக்கமாக உரைக்கின் நாட்டுப்பொருளாதாரத்தை உலகப் பொருளாதாரத்துடன் இணைத்தலாகும். தத்தம் தேவைகளைப் பூர்த்தி செய்தலுக்காக ஒன்றாக இணைதல் எனும் செயற்றிட்டம் முன்னெடுக்கப்படுகிறது. இதன் வழி புறக்காரணிகளால் தூண்டப்பட்டு குறித்த நாட்டில் ஏற்படும் மாற்றங்களைக் குறிப்பதாக

உலகமயமாதல் அமைகிறது. இது அடிப்படையில் பூகோளமயமாதல், தாராளமயமாதல் செயன்முறையைக் குறித்து நிற்பதோடு சமகால பொருளாதார, சமூக, அரசியல், பண்பாடு அம்சங்கள் சார்ந்த ஒன்றாகவும் கருதப்படுகிறது.

தெற்காசிய நாடுகள் தம்மடையாளமாக நெடுங்காலம் பேணிப்பாதுகாத்த பழமையும் மரபுவழிப் பாரம்பரியமும் நிறைந்த சமயம், மொழி, வழக்கங்கள் சிதையாதிருக்க பல்வேறு பகைப்புலங்களைக் கடந்து வந்துள்ளன. முடியாட்சிக்காலப்போர்கள்' மற்றும் புலம்பெயர்வுகள், காலனித்துவ காலம், நவகாலனித்துவகாலம் எனும் பல்வேறு படித்தரங்களைக் கடந்து வந்துள்ளன. (முத்துமோகன்.ந.2017.ப.1-5) இவ்வரலாற்றுப்பின்புலத்தின் வழி மரபைப் பேணுதலுக்கும் நவீனமயமாதலுக்கும் இடையில் பல்வேறு போராட்டங்களையும் வலிகளையும் இந்நாடுகள் சந்தித்துள்ளன. மரபு, நவீனம் என்பவற்றுள் எது சரி எது பிழை என்று கட்டிறுக்கமான உரையாடலை நடாத்துதல் சாத்தியமற்ற ஒன்றாகவே இருந்து வந்துள்ளது. முழுப் பழமைவாதம் காலவெள்ளத்துள் காணாது போக முழுப்புதுமைவாதமானது குறித்த மக்களின் அடையாளத்தை முற்றாக அழித்து வரலாறு அற்றவர்களாக்கியது. ஆகவே இங்கு கறுப்பா. வெள்ளையா, என்ற முடிவுக்கு வருதல் தவிர்க்கப்பட்டு சம விகிதத்தில் கையாளுதல் ஆகிய கறுப்பு - வெள்ளை அற்ற, இரண்டும் கலந்த சாம்பல்வெளியை உடையனவாக இவை திகழ்கின்றன. இது தவிர்க்க இயலாத சமூக அசைவியக்கமாகக் காணப்படு கின்றது.

உலகமயமாதல் பல்வேறு சாதகங்களை உள்ளடக்கியதாகக் கருதப்பட்டாலும் பாதகமான விளைவுகளையும் தந்த வண்ணமே உள்ளது. அதற்குத்தக்க உதாரணமாக கொவிட் -19 வைரஸின் தாக்கத்தைக் குறிப்பிடலாம். 2019 டிசம்பரில் சீனாவில் உருவானதாகக் கருதப்படும் இவ்வைரஸ் 2020 மார்ச்சில் உலகப்பெருந்தொற்றாக மாறியது. உலகமயமாதலின் விளைவாகவும் இன்றைய உலகுக்குப் பெருஞ் சவாலாகவும் இது அமைந்துள்ளது. உலகப் பொருளாதாரம், அரசியல், சமூகம், சமயம், பண்பாடு என எல்லாத் தளங்களிலும் இது பாரியதாக்கத்தை ஏற்படுத்தியது. இந்த அடிப்படையிலேயே உலகமயமாதல் பின்னணியில் கொவிட் - 19 வைரஸின் தாக்கம் நிறைந்துள்ள கடந்த இருவருடங்களில் சமயப்பண்பாட்டு வெளியில் நிகழ்கின்ற மாற்றங்கள் மற்றும் சவால்களை ஈழத்தின் யாழ்ப்பாண மாவட்டத்தில் அமைந்துள்ள நல்லூர்க் கந்தசாமிக் கோயிலை அடிப்படையாகக் கொண்டு ஆராய்வதாக இவ்வாய்வு கட்டமைக்கப்படுகின்றது.

சமயம் - கோயில் - திருவிழா

குறித்த சமூகத்தினது பண்பாட்டின் மையத்தளங்களாக விளங்குவன சமயம், மொழி என்பனவாகும். (பக்கவத்சலபாரதி. 2015.ப.155) ஏனைய பண்பாட்டுக்கூறு களைப் போல உடனடியாக மாறாத ஆனால் பல சவால்களுக்கு முகம் கொடுத்து காலதேச வர்த்தமானத்துக் கேற்பத் தம்மைப் புதுப்பித்து மீட்டுருவாக்கம் செய்து கொண்டு வளரத்தக்கவையாக இவை திகழ்கின்றன. சமயமானது மாயாசக்திகள் மீதுள்ள நம்பிக்கையாகவும், அச்சத்தின் ஊடாக உருவான கடவுள்களை வழிபடும் நெறி என்றும் இயற்கைக்கு அதீதமான சக்தி ஒன்றுண்டு எனும் நம்பிக்கையின் வழி உருவானதாகவும் இது விளக்கப்படு கின்றது. (வில்டூரண்ட். 2008.பக்.10 - 12) உலகில் இனக்குழுச் சமுதாயங்களின் வழி பல சமயங்கள் உருவாயின. அவை மேலும் மேலும் பல்கிப்பெருகின. இந்தியாவிலும் பல சமயங்கள் பல்கிப்பெருகின. அவை காலனித்துவ

காலத்தில் ஒன்று திரட்டப்பட்டவையாகிய வேதவழிவந்த சமயங்களே; அவை ஆட்சியதிகாரத்தின் பாற்றுபட்டவர்களால் 'இந்துசமயம்' எனச்சுட்டப்பட்டது. (முத்துமோகன்.ந.2016.பக்.13) துர்க்கைம் 'சமூகம்தான் கடவுள்' என்கிறார். தனிமனிதன் என்ற எல்லையைத்தாண்டி மனிதர்கள் ஒன்றுகூடுகின்ற நேரத்தில் அவர்களுடைய கூட்டுணர்வின் பிம்பமாகத் தான் கடவுள் சமூகத்தால் பார்க்கப்பட்டது. தனிமனித எண்ணங்களைத் தாண்டி அவனது ஓர்மத்துக்கு அப்பால் மக்கள் திரள்நிலை எய்தும் போது வெளிப் படுவதாக கடவுள் என்பது இருந்துள்ள தாகவும் ஆதலால் கடவுளின் இன்மை சமூகத்தில் இன்மையாகிவிட வாய்ப்புள்ள தாகவும் சில ஆய்வாளர் குறிப்பிடுவர். (பரமசிவன்.தொ.,சுந்தர்காளி: 2008.பக்.7-8)

ஆரம்பகால இயற்கைச் சக்தி வழிபாடு என்பது இயற்கையின் சீற்றத்தின் வழி உருவான அச்சத்தின் மேல் கட்டமைக்கப் பட்டது. காலவோட்டத்தில் ஒருவனுக்கு ஏற்பட்டிருக்கும் அவலக்கேடு ஒரு நல்ல வாய்ப்பை நாடித்திசை திரும்பும் எனின் அது அவனைக் கடவுளிடம் நம்பிக்கை வைக்கத் தூண்டியதாக நீட்சே குறிப்பிடு கிறார். (Joyful wisdom.1977. p.277) கடவுளுக்கு உருவம் கொடுத்தல் எனும் செயல் நிலை மனித குலவரலாற்றில் மிகப் பிற்காலத்தில் நிகழ்ந்தது. குறித்த சமூகத்தினதும் சமயத்தினதும் அதிகார மையங்களாகக் கோயில்களே திகழ் கின்றன. நம்பிக்கை சார்ந்து சத்தியம் செய்தல், வரம் கேட்டல், பரிகாரம் செய்தல், சமூக நடத்தை சார்ந்து நீதிமன்றங்களாக, மக்களின் ஒன்றுகூடல் நிகழும் இடமாக, பொருளாதார, அரசியல் மையநிலையமாக எனப் பல்வகைப்பட்ட அதிகாரங்கள் காலங்காலமாக கோயில் களுக்கு வழங்கப்பட்டு வந்துள்ளன.

சிறுதெய்வங்களும் அவை சார்ந்த வழிபாடுகளும் குறித்த சமூகத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற மக்கள் மயப்பட்ட அதிகாரத்தை மையப்படுத்தாத யாவருக்குமான மக்களின் கூட்டு நனவலி வழி நிகழ்கின்றதாக அமைந்திருக்கின்றன. ஆனால் ஆகமமயப்பட்ட கோயில்கள் அதிகாரத்தரப்பின் அல்லது மேட்டுக் குடியினரின் அல்லது பொருளாதார மேம் பாடு உடைய தரப்பின் அதிகாரத்துவத்தை வெளிப்படுத்துவதாக பிராமணர்களின் கைகளில் தம் ஆன்மீக அதிகாரத்தை ஒப்படைத்ததாக சமூக அடுக்குகளின் வழி ஒழுங்கமைக்கப்பட்டவையாக இருப்பது இங்கு கவனிக்கத்தக்கது.

சமயரீதியில் மக்கள் ஒன்றிணைந்து கூடிக் கொண்டாடும் விழாக்கள் திருவிழாக்கள் எனப்படுகின்றன. இவை ஒரு நாளோ அன்றிப் பல நாட்களோ கொண்டாடப் படுபவையாகக் காணப்படுகின்றன. இத்திரு விழாக்கள் ஒன்றிணைதல், கொண்டாடுதல், கூடியுண்ணல், மகிழ்ந்திருத்தல், முதலான அடிக்கட்டுமானத்தை உடையன. ஆதலால் இவை அனைத்து வயதினருக்கும் பேதமின்றி ஆர்வமும் உற்சாகமூட்டு வனவாக உள்ளன. இதன்வழி பொருளா தாரக் கட்டுமானம், சமூக இயங்கியல் என்பவையும் ஸ்திரநிலை பெறுகின்றன. திருவிழாக்கள் எப்போதும் அவ்வச்சமூகத் தினரும் சமயத்தினரும் பாரம்பரியங்கள், பண்பாடுகள், விழுமியங்கள் போன்ற வற்றைப் பிரதிபலிப்பவையாகவே காணப் படுகின்றன. இவை தனிமனித, சமுதாய, தேச அளவில் வேறுபட்டவையாக அமைகின்றன. அவற்றுள் கோயிற் திருவிழாக்கள் தலையானவை எனலாம். அவை சமூகத்தின் அனைத்து இயங்கியல் தளத்திலும் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்துவன.

உலகமயமாதல்

காலனித்துவ, பின்காலனியச் சூழல் உலகமயமாக்கலுக்கு தென்னாசிய நாடுகளை உட்படுத்தின. காலனித்துவ ஆட்சியாளர்கள் தம் அதிகாரத்துக்கு

உட்பட்டநாடுகளை அவற்றின் வளங்களை, உழைப்பை சுரண்டி தம்மை மேம்படுத்திக் கொண்டனர். புதிய முதலாளித்துவத்தை ஏற்படுத்தினர். ஜனநாயகத்தின் வழி பின்காலனித்துவ சூழலில் தாராளமய மாக்கல் பொருளாதாரக் கொள்கை நவமுதலாளித்துவத்தை உருவாக்கியது. கீழைத்தேய சமுகம் மேலைத்தேச வகைப்பட்ட நவீன யுகத்தை சந்தித்த போது அவை வரையறுக்கப்பட்ட ஒரு கட்டமைப்பையும் தமது மரபு குறித்த தெளிவையும் பெற்றுக்கொண்டன. (முத்துமோகன்,ந., 2017,ப.2) ஆனால் அவை மேலைத்தேயக் கல்வி கற்ற – மேலைத்தேயத்தவர் போல பாவனை செய்த புதிய மேட்டுக்குடி தேசியவாதி களால் கட்டமைக்கப்பட்டன. அதேவேளை சமூக மரபுகளை கேள்விக்குள்ளாக்கவும் விமர்சித்து மதிப்பிடும் முறையும் வளர்ச்சியுற்றது. பல சாதகங்களை அரசியல்வாதிகளும், பொருளிய லாளர்களும் சுட்டிக்காட்டினாலும் அதற்குச் சமாந்தரமான வலிதான பாதக விளைவுகளும் நிகழ்கின்றன என்பதை மறுக்க முடியாது.

இவை வழி புதிய வர்க்கங்களை உருவாக்கின. குறித்த இனத்தின் - தேசத்தின் - சமூகத்தின் - சமயத்தின் தனியடையாளங்கள் அழிக்கப்பட்டதோடு அதிகாரத்தரப்பின் அடையாளங்கள் திணிக்கப்பட்டன. சுயநலமனங்களும் பொருளாதார மனங்களும் உருவாயினவே அன்றி சமூக விழுமியங்கள் சார்ந்த கூட்டிணைவு சிதைக்கப்பட்டது. பொருளாதாரம், அரசியல், உழைப்பு உள்ளிட்ட சுயங்கள் சிதைக்கப்பட்டு தங்கிவாழ்தல் எனும் அவலநிலை உருவானது. பொருளாதாரவளத்திற்காக குடும்பத்தை, நிலத்தை, பண்பாட்டைப் பிரிதல் - மறத்தல் என்பது இயல்பாக ஏற்படுத்தப்பட்டு தனியன்கள் உருவாயின. இதன்வழி குடும்ப-சமூக-அலகுகள் சிதைக்கப்பட்டன. நிதிப் பரிவர்த்தனை சார்ந்த மனம் உருவாக்கப்பட்டது. ஓய்வற்ற உழைப்பு, விரைவான நோய்நிலை. மன நெருக்கீடு போன்றவற்றை உருவாக்கின. பல்லின கலாசாரம் உள்ளிட்டவை ஒற்றைத்தன்மை பெற்றதே தவிர மக்களை ஒற்றுமைப்படுத்தப்படவில்லை.

இவற்றின் நீட்சியாகத்தான் "கொரோனாக் காலமும்" அமைந்துள்ளது. கோவிட் - 19 உலகமயமாக்கலின் பேறேயாகும். அது உலக அளவில் சுகாதார, பொருளாதார நெருக்கடிகளை உருவாக்கியுள்ளது. 2020, 2021 காலப்பகுதியில் வேலைவாய்ப் பின்மை, கல்வியின்மை, பஞ்சம், உற்பத்தி யின்மை என்பவற்றோடு மக்களின் கூட்டு நனவிலியையும் சிதைத்து விட்டது. குறித்த வீட்டினுள் வசிக்கும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மனிதர்களையே தனியன்களாக்கி சமூக, இடைவெளியை முன்னிறுத்திய ஒன்றாகத் திகழ்வது கவனத்துக்குரியது. மனநெருக்கீடுகளுக்கு உள்ளாகும் மனிதர்கள் அவற்றினின்று வெளிவரவும் வாழ்வில் நம்பிக்கை பெறவும் கூட்டுச் செயற்பாட்டை வலியுறுத்தவும் மனவடுக் களை நீக்கவும் உரிய இடங்களாகவே ஆலயங்கள் திகழ்கின்றன. அவை சுய உளஆற்றுகை நிலையங்கள். ஆனால் அங்கு மக்கள் ஒன்று கூடுதல் தடைசெய்யப்பட்ட நிலையே இன்று காணப்படுகின்றது.

நல்லூர் கந்தசாமிகோயில்

யாழ்ப்பாணத்தில் புவனேகபாகு மன்னனால் கட்டப்பட்ட ஆலயமே நல்லூர் கந்தசாமி கோயில் என்பர். காலனித்துவத்தின் தொடக்ககால ஆட்சியாளர்களான ஐரோப்பியர்களால் ஏனைய சைவாலயங் களைப்போலவே நல்லூரும் இடித்தழிக்கப் பட்டது. பின்னர் ஒல்லாந்தர் காலத்தில் மீட்டுருவாக்கப்பட்டது. இன்று இவ்வாலயம் ஈழத்துச்சைவர்களின் குறிப்பாக யாழ்ப்பாணத்தின் பேரடையாளமாக உருப் பெற்று நிற்கின்றது. நல்லூர் கந்தசுவாமி கோயிலில் ஆகம மரபுக்கு மாறாகக்

கிழக்குவாசல் கோபுரத்துக்கு முன்னால் முதன்முதல் கட்டப்பட்ட வில்லுமண்டபம் இன்று யாழ்ப்பாண ஆலயங்களின் தனித்த அடையாளங்களாக மாற்றமுற்றது. ஆலயத்திருவிழா என்பது பெரும் பண்டிகையாகவே கருதப்படுகின்றது. இருபத்தைந்துநாள் திருவிழா நடைபெறுவ தாயினும் அது அம்முழுமாதத்துக்குமான பெருவிழாவாகவே அமைந்துள்ளது. இத்திருவிழாவுக்கு ஈழத்தின் பலபாகங் களிலும் இருந்து மட்டுமல்லாது உலகின் பலபாகங்களில் இருந்தும் தமிழர்கள் வருகை தருவர். உலகமயமாதற் சூழலில் பெருஞ் சுற்றுலாப்பயணிகளைக் கவரும் காலமாகவும் அந்நியச்செலாவணி அதிகரித்த காலமாகவும் இக்காலம் அமைகிறது. தம் தாய் நிலத்துக்கு வருகை தரும் புலம்பெயர் தமிழர்கள் பலர் தத்தம் பிரதேச ஆலயங்கள், பொது அமைப்புக் கள், உறவினர்களுக்கு தம்மாலான உதவிகளை விரும்பியோ அன்றி தமது மேலாண்மையை அல்லது தம்மடை யாளத்தைப் பிறந்த மண்ணில் பதிப்பதற் கானவோ செய்து வருகின்றனர். இது குறித்த சமூகத்தின் மீட்டுருவாக்கத் துக்கும் பொருளாதார வளர்ச்சிக்கும் உதவுகிறது. இது இவ்வாலயத் திருவிழாவின் உபரி உற்பத்தியாகவும் அமைகின்றது.

நல்லூர்க்கந்தசுவாமி ஆலயத்திருவிழா யாழ்ப்பாணத்தினதும் ஈழத்தவரினதும் சமயத்திருவிழாவாக மட்டுமன்றி பண்பாட்டு அடையாளமாகவும் விளங்குகிறது. நல்லூராலயம் இவ்வாறு செல்வாக்குறக் காரணங்களாக நல்லூர் இராசதானி பெற்றிருந்த அடையாளம், முருகன் மீது மக்கள் கொண்டிருந்த அதீத நம்பிக்கை, ஒல்லாந்தர் பாணியிலான நிர்வாகக் கட்டமைப்பு-நேரந்தவறாமை ஒழுங்கு முறைகள், நகரமையம்-பொருளாதார மையம், நல்லூராலய முன்றலில் உருவான சித்தர் மரபும் சித்தர்களின் செல்வாக்கும், அறுபதுகள் வரை சாதிக் கட்டுமானங்கள் இருந்தாலும் பின்னர் யாவர்க்குமான கோயிலானமை, அரசியல் தொழிற்சங்கப் போராட்டங்களின் மையமாக ஆலயமுன்றல் திகழ்தல், ஆலயத்தின் பிரமாண்டம், கவர்ச்சி - அலங் காரக்கந்தனின் வீதியுலா, அலங்காரங்கள், ஆலயச் சுற்றாடலில் நிகழும் கலை நிகழ்வுகள் போன்றவற்றைக் குறிப்பிடலாம். நல்லைநகரை மையங்கொண்ட சைவமீட் டுருவாக்க முயற்சிகளும் ஆறுமுக நாவலரின் எழுச்சியும் அவருக்கும் ஆலய நிர்வாகத்துக்குமிடையிலான முரண்பாடு களும் ஆலயத்தைப் பிரபலப்படுத்தின.

இவ்வாறான இன்னோரன்ன காரணங்கள் நல்லூர்க்கந்தசுவாமி ஆலயத்தை பிரபல்யப்படுத்தின. மக்கள் மயப்படுத்தின. இக்கவர்ச்சி விசைகள் ஆலயத்தை நோக்கி மேலும் மேலும் மக்களைப் படையெடுக்கச் செய்தன. ஆலயக் கட்டட விரிவாக்கம் புதிய கோபுரங்களின் பிரமாண்டம் என்பன யாழ்ப்பாண சைவசமய அதிகாரமையமாக நல்லூரைத் தொடர்ந்தும் கட்டமைக்கிறது. கட்டடங் களுக்கு குறித்த வர்ணங்களை மட்டும் பூசுதல், நேரந்தவறாது நீண்ட தூரத்துக்குக் கேட்கும் மணியொலி, நேரந்தவறாத பூசை, அலங்காரம், பிரமாண்டம், மேலாடை யின்றியே ஆலயத்தினுள் ஆண்கள் பிரவேசிக்க அனுமதி, வாசனைகள், ஒவியங்கள் என பற்பல காரணங்கள் மக்களைக் கவர்கின்றன. மேலும் மேலும் நல்லூரின் செல்வாக்கை அதிகரிக்கச் செய்கின்றன. ஆனால் நல்லூர் நிர்வாகம் ஆலயத்தின் பெயரால் இன்றுவரை எந்தச் சமூகப்பணிகளையும் முன்னெடுத்த தாகவோ அன்றி ஆலயத்தை நாடிவரும் அன்பர்களுக்கு உணவிடவோ அன்றி அடிப்படை வசதிகளை ஏற்படுத்தித்தரவோ இன்றுவரை முன்வரவில்லை. ஆயினும் அவற்றை யாழ்மாநகர சபையும் பக்தர்கள் சிலருமே அவற்றை ஏற்படுத்தியுள்ளனர். ஆயினும் நல்லூராலயத்தின் 'மவிசு' கூடிக்கொண்டேதான் இருக்கின்றது.

## கொரோனாக்காலம்

இலங்கையில் 2020 மார்ச் தொடக்கம் ஏற்பட்ட கொரோனாப் பெருந்தொற்று இன்றுவரை நீங்கிய பாடில்லை. இந்த இரண்டு ஆண்டுகளிலும் (2020,2021) அது தேசத்தின், இனங்களின் சமயங்களின் வாழ்வை அவ்வவற்றின் அரசியல், பொருளாதார கலை இலக்கிய அம்சங்களையும் அடிப்படைகளையும் புரட்டிப் போட்டிருக்கிறது. மறுசீரமைப்பைக் கோர வைத்துள்ளது. பொருளாதார, அரசியல் நெருக்கடிக்குள் தேசத்தை ஏன் உலகத்தை உந்தித்தள்ளிய அளவுக்கு சமய சம்பிரதாயங்களையும் அது பாதித்துள்ளது. யுத்தகாலம் பல நெருக்கடிகளை ஏற்படுத்திய போதும் அது மக்களை ஒன்று திரளவைத்தது. கொரோனா அதற்கு மாறாக மக்களை தனியன்களாக்கியது. கூட்டுச் செயற்பாட்டை நிராகரிக்கிறது. தனிமனித நிலைப்பாட்டை, தனிமனித இருப்பை கரிசனைப்படுத்துவதாக கட்டமைக்கிறது. குடும்ப - சமூக அலகுகளின் ஸ்திரத்தன்மையைக் கேள்விக்குள்ளாக்கியுள்ளது. மரணம், மரணம் சார்ந்த நம்பிக்கைகள், சடங்குகளை நிராகரித்து அச்சத்தின் வழி உருவான சமய சடங்கு சம்பிரதாயங்களை அதன் வழியேயே இல்லாமல் செய்கிறது. உலக அதிகாரத்தரப்பின் பிரித்தாளும் தந்திரத்தை மிகச் சாதாரணமாக கொரோனா மற்றும் கொரானாவின் பெயரால் பிரயோகித்தல் சுட்டியுரைக்கத் தக்கதாகும்.

## கொரோனா - திருவிழா - நல்லூர்க்கந்தசாமி கோயில்

கொரோனாக்கால சமய – கோயில் - நடவடிக்கைகளில் ஏற்பட்டுள்ள சவால்கள், மாற்றங்கள் என்பவற்றை சமூக மெய்யியற் தளத்தில் வாசிக்கும் ஒரு முயற்சியாக கொரோனாக்காலத்தில் நடைபெற்ற நல்லூர் கந்தசாமிக் கோயிலின் திருவிழாக்கள் இங்கு மாதிரிகளாகப் பயன்படுத்தப் படுகின்றன. கொரோனாக் காலத்திருவிழாக்களைப் பற்றிய அவதானிப்புக்கள் பின்வருமாறு

1. திருவிழாக்கள் நிறுத்தப்பட்டன அல்லது வெறும் சடங்குகளாக - சம்பிரதாயங்களாக நடாத்தப்பட்டன.
2. மக்களின் வருகை, நேர்த்திக்கடன், வழிபாடு உள்ளிட்ட அனைத்துச் செயற்பாடுகளும் தடைசெய்யப்பட்டன.
3. பண்பாட்டு அடையாளங்கள், கலைநிகழ்வுகள் தடைசெய்யப்பட்டன.
4. ஆலயச் சூழலில் நிகழும் வியாபார நடவடிக்கைகள் தொழில்சார் செயற்பாடுகள் நடவடிக்கைகள் தடைப்பட்டன.
5. திருவிழாவை முன்னிட்டு நல்லூரில் வந்து இணையும் தெருக்களில் கட்டமைக்கப்படுகின்ற தற்காலிகப் பந்தல்கள், தெருமூடி மண்டபங்கள், தண்ணீர்ப்பந்தல்கள், அன்னதானச் செயற்பாடுகள் தடைப்பட்டன, கட்டமைக்கப் பட்டவையும் நுகர்வோரின்றிப் பயனற்றுப் போயின.

இவ்வாறான இழப்புக்கள் நிகழ்ந்தமை சமூக அசைவியக்கத்தில் பாரிய தாக்கங்களை ஏற்படுத்தின. ஆலயம்-திருவிழா-பக்தி வழிபாடு என்ப வற்றின் வழி ஆலயம் செல்லுதல் எனும் செயற்பாட்டை இழத்தலின் வழி சமூகமும் தனிமனிதரும் அகவயமாகவும் புறவயமாகவும் பல நெருக்கீடுகளுக்கு உள்ளாயினர். தமது வாழ்வில் ஏற்படும் துயரங்களைக் கூறி ஆறும் இடமாகவும் உளவள ஆற்றுகை நிலையமாகவும் பிரமாண்டம், அழகியல், பக்தி, கூட்டிணைவு என்பவற்றினூடாக மனங்களில் மகிழ்ச்சியை விளைவிக்கும் இடமாகவும் பிரிந்த உறவுகள் கூடுதல் , திருமண நிச்சயம் (பெண்பார்த்தல்) புதிய உறவுகள் உருவாதல், நீண்டகாலம் சந்திக்காத உறவுகளைச் சந்தித்து உரையாடுதல் எனப்பல வகைப்பட்ட மகிழ்வு நிறைந்த தருணங்

களை சமூகம் இழந்தது. அது உளநெருக்கீட்டை ஏற்படுத்தியது. பக்தியாளர்களின் வரவு அதிகாலை, காலை, மாலை என அமைய, யாவரதும் வரவு மாலையின் பின்பொழுதுகளில் வர்ண ஒளிகளில் நடைபெறும். ஆலயத்தை சுற்றியுள்ள நல்லை ஆதீனம். துர்க்காமண்டபம் உள்ளிட்ட அனைத்து மண்டபங்கள், மடங்களிலும் பிரசங்கம் .சங்கீத கச்சேரிகள், நடனம் மேளக்கச்சேரிகள் உள்ளிட்ட பல்வேறு கலை நிகழ்வுகள் அரங்கேறுதல் தடைப்பட்டமை மக்களில் கலைசார நடவடிக்கைகளிலும் ஈடுபாட்டிலும் பெருந்தொய்வை ஏற்படுத்தியது. தொழில்சார் கலைஞர்களின் வாழ்வில் பொருளாதார நெருக்கீடு பல்வேறு இடர்பாடுகளை நிகழ்த்தியது. வாழ்வாதார உதவிகளை வேண்டி நிற்பவர்களாக அவர்களை மாற்றியது.

மக்களின் பக்தி சார் நடவடிக்கைகளிற்கு ஏற்பட்ட தடை அவர்களின் வாழ்வில் ஏற்பட்ட இடர்பாடுகளுக்குக் காரணமோ எனும் எண்ணத்தை — அச்சத்தை ஏற்படுத்தி உளநெருக்கீட்டுக்கு உள்ளாக்குகின்றது. ஆலயத்தை அண்மித்த பெருந்தெருக்களில் பக்தர்களின் நன்மைக்காகவும் தத்தம் சமூக அடையாளங்களை நிலைநிறுத்தவும் மேனிலையாக்கச் செயற்பாட்டின் ஒரு வழிமுறையாகவும் கட்டமைக்கப்படுகின்ற தற்காலிக தெருமூடிப்பந்தகள், இவ்வருடமும் அமைக்கப்பட்ட போதும் அவை அர்த்தமற்ற செயல்களாக அமைந்தன. குறித்த சமூகத்தின் சாதாரண தொழிலாளியில் இருந்து பணக்காரர் வரையான கூட்டிணைவின் வழி கூட்டுப் பொருளீட்டலினூடாக பல லட்ச ரூபாய்கள் செலவில் அமைக்கப்பட்ட அப்பந்தல்கள் அர்த்தமற்று நின்றன. தண்ணீர்ப்பந்தலில் கவிழ்த்து வைக்கப்பட்ட குவளைகளை தலைநிமிர்த்த அவ்விடத்தைத்தாண்டிச் செல்லும் மனிதர்கள் வரவில்லை. எல்லா உழைப்புக்களும் அர்த்தமிழந்தன. ஆலயத்தைச் சுற்றி உருவாகும் தற்காலிக வியாபாரநிலையங்கள் அமைக்கப் படவில்லை. நிரந்தரக் கடைகளும் திறக்கப் படவில்லை. நல்லூர்ப் பெருந்திருவிழாவில் சிறு கைத்தொழிலாளர்கள், சிறுவியாபாரிகள் உள்ளிட்ட பல்வகை உழைப்பாளர்களின் உழைப்பை கொரோனா நிர்மூலமாக்கிவிட்டது. வறுமையின் பிடியில் அக்குடும்பங்களும் கல்வி வசதியற்று, உணவற்று குழந்தைகளும் வாடின. ஆலயச் சூழலெங்கும் காணப்படும் கூட்டிணைவு அற்று ஆலயம் வெறுவெளியாய்க் காட்சியளித்தது.

ஆலய நிர்வாகம், ஒல்லாந்தர் காலந்தொட்டு மாறாது பேணிவந்த மரபுகளையும் பண்பாடுகளையும் தளராது கடைப்பிடிக்கவே எப்போதும் முயற்சித்து வந்தது. அர்ச்சனைச்சிட்டை ஏழைகளுக்கானதாய் ஒரு ரூபாயாகத்தான் இப்பின்காலனியச் சூழலிலும் இருக்கின்றது. யுத்தகாலத்தில் இராணுவத்தின் பிரவேசத்துக்கு எதிரானதாகவும் இந்திய இராணுவத்துடனான யுத்தகாலத்தில் நகர மக்கள் தஞ்சம் புகுந்த இடமாகவும் இருந்தது. யாழ்ப்பாண இடப்பெயர்வுக்குப் பின் ஏற்பட்ட இரட்டை அதிகாரத்துள் அகப்படாமல் இருக்க ஆலய முன்றலில் வேலியமைத்து மக்களை முன்றலுக்கு அப்பால் புறந்தள்ளியது. ஆனாலும் கந்தனின் கவர்ச்சி விசை, ஆலயத்தின் பௌதிகப் பிரமாண்டங்கள் மக்களைக் கவர்ந்த வண்ணமே இருக்கின்றன. யாழ்ப்பாணத்தின் பேரடையாளமாக ஈழத் தின் ஒரு அடையாளமாக நாணயக் குற்றியின் ரூபம் இடம்பெறுதல் வரையாக செல்வாக்கை இது பெற்றது. இலங்கை யின் ஜனாதிபதி வருகையின் போது கூட வளைந்து கொடுக்காத பண்பு-நேர ஒழுங்கு முறைமை மக்களால் வியந்து பாராட்டப்பட்டது. தனிநபர் நிர்வாகத்தின் கீழ் ஆலயம் இயங்குவதே அதன் கட்டிறுக்கமான செயற்பாட்டுக்கு அடிப்படை எனலாம்.ஆனால் கொரோனாக்காலத்தில் ஏற்பட்ட சவால்கள் நல்லூர் ஆலயத்தையும் சில சமரசங்களையும் மாற்றங்களையும்

நோக்கி உந்தித்தள்ளியது. இவ்வருட ஆலயத்திருவிழாக்களின் வீடியோக்களை (vedio) அடிப்படையாகக் கொண்டு பின்வரும் அவதானிப்புக்களைப் பெறமுடிந்தது.

1. உள்வீதியுலா - திருவிழா என்பது இறைவன் வீதியுலா வந்து எல்லா ஆன்மாக்களுக்கும் அருள் செய்கின்ற – காட்சி தருகின்ற ஒன்றாகவும் ஆலயத்துள் பிரவேசிக்க முடியாதவர் களுக்கு இறைவன் வெளிவீதியுலா வந்து காட்சி தருவதாகக் கட்டமைக்கப்பட்ட ஒன்றாகவும் கருதப்படுகிறது. இங்கு பக்தர்களும் இல்லை: வெளி வீதியுலாவுமில்லை: வெறும் சம்பிரதாயம் மட்டும் இருந்தது.

2. பக்தர்களின் வரவு – கொடியேற்றத்திருவிழாவின் போது நாற்புற வீதிகளினூடாகவும் பக்தர் வருகை தந்த போதும் பொலீசார், சுகாதாரத் துறையினர் இணைந்து தடுத்து நிறுத்தினர். ஆலய முன்புற வீதியில் இருதரப்புக்கும் வாக்குவாதம் நிகழ்ந்தமையையும் மக்கள் வீதியில் அமர்ந்திருந்தமையையும் கொடி யேற்றம் நிகழ்ந்த ஓசையை (மணி யொலி) கேட்டபின் அவ்வவ்விடத்தில் தேங்காய் உடைத்து கற்பூரம் ஏற்றி வழிபட்ட பின் திரும்பிச் சென்றனர்.

3. தொண்டர்படை – ஆலயத் தொண்டர்கள் காலங்காலமாக இருந்து வந்துள்ள போதும் கொரோனாக்கால தொண்டர் படையணி உருவாக்கப்பட்டு அதற்கான தனிச் சீருடை, முகக்கவசம் என்பன வழங்கப்பட்டன. வழமையாக ஆலயங்களில் காவி, வெள்ளை நிறங்களில் அமையப்பெறும் ஆடை முறைமையினின்றும் மாறுபட்டு சிவப்பு நிறம் பயன்படுத்தப்படுகிறது.

4. உலாப்போதல் - மக்கள் வெள்ளத்தில் மனித தோள்களில் மிதந்து செல்வது போல் செல்லும் நல்லூர்க் கந்தன், பக்தர் வரமுடியாத சூழ்நிலையினால் சகடைகளில் வைத்துத் தள்ளிச் செல்லப்பட்டார். ஆதலால் இத்திருவிழா வெறும் சம்பிரதாய பூர்வமானதாக, தனக்கான அர்த்தத்தை இழந்த ஒன்றாக அமையப்பெற்றது.

5. பிராமணமயவாக்கம் - பூசை தொடக்கம் புராண படனம் வரை பிராமணர்கள் மட்டுமே ஆதிக்கம் பெற்றிருந்த சூழலில் பிராமணரல்லாதாரும் புராணபடனம் செய்யலாம் என்ற சூழலை ஆறுமுகநாவலர் ஏற்படுத்தியிருந்தார். ஆனால் நல்லூரில் சமீபகாலமாக பிராமணரே 'திராவிட தோத்திரத்தை' இசைக்கின்ற மரபு உருவாகிவந்தது. அதனை இக் கொரானாக் காலம் திண்மநிலைப் படுத்தியுள்ளது. சாதாரண திருவிழாக்களிலே பிராமணர் கூட்டாக வடமொழிப்பாராயணம் செய்து வருவதையும் அவதானிக்க முடிகிறது. பிராமணரல்லாதார் - தொண்டர்கள் 'தீவட்டி பிடித்தல்' முதலான தொண்டுகளிலேயே ஈடுபடுத்தப் பட்டனர்.

6. ஒளிப்பதிவும் ஒளிபரப்பும் - நல்லூர் ஆலயத்தினுள்ளே படம் பிடித்தல், வீடியோ எடுத்தல் முதலான செயற்பாடுகள் இதுவரைகாலமும் முற்றாகத் தடைசெய்யப்பட்டிருந்தது. வெளிவீதியுலா வருங்காட்சிகளே நேரடியாக ஒளிபரப்பப்பட்டன. ஆனால் கொரானாக் கால விளைவாக இவ்வருடம் ஆலயத்தின் திருவிழாக் கால அனைத்து நிகழ்வுகளும் படம் பிடிக்கப்பட்டு நேரடியாக ஒளிபரப் பப்பட்டன. உலகெங்கும் உள்ளவர்கள் நேரலையாகக் காண முடிந்தது.

7. மூர்த்தி அலங்காரமும் ஆடை அலங்காரமும் - வீதியுலா வரும் மூர்த்தியின் அலங்காரத்துக்கு பெயர் போனதால் நல்லூர்க்கந்தன் 'அலங்காரக்கந்தன்' எனக் காலங்காலமாகச் சிறப்பிக்கப் படுகிறான். இம்முறை மூர்த்தியின் அலங்கார நிறத்துக்கு ஏற்ப பிராமணர் களின் ஆடை வர்ணங்களும் அமைந் திருந்தன. உதாரணமாக கொடி யேற்றம் (சிவப்பு), தேர்த்திருவிழா (பச்சை), கொடியேற்றம் (வெள்ளை) போன்றவற்றைச் சிறப்பித்துக் கூறலாம்.

8. ஆன்மீக மனநிலை - திருவிழாக் காலத்தில் ஆலயச்சூழலிலேயே வெளி மனிதர்களின் தொடர்பற்று தனிமைப்பட்டு இருந்த பிராமணர்கள் மந்திர உச்சாடணத்தின் போதோ, பாராயணத்தின் போதோ முகக்கவசங் களைக் களையவில்லை. மந்திர ஒலி, பாராயணத்தின் பயன் பற்றிய நம்பிக்கை இதன் மூலம் வலு இழக் கிறது. அத்தோடு கதிர்காம, செல்வச் சந்நிதி, மண்டூர் ஆலயங்களின் வாய் கட்டிப் பூசை செய்யும் முறைமையை இது ஞாபகப்படுத்தியது. ஆனால் அக்கப்புறாளைகளின் வாய்கட்டும் வெள்ளாடையின் எளிமை இவர்களின் வர்ண முகக்கவசங்களில் இருக்க வில்லை. மாறாக ஆன்மீக மனநிலைமையைக் குலைக்கும் 'பந்தா'வாகவே இருந்தது.

முடிவுரை

காலனிய, பின்காலனிய வழி கட்டமைக் கப்பட்ட உலகமயமாக்கல் காலனித் துவத்துக்குட்பட்ட நாடுகளை உலக மயமாதலுக்கு மேலும் மேலும் தூண்டியது. அந்நாடுகளின் மக்கள் தத்தம் சமூக, இன, மத, மொழி, பொருளாதார, அரசியல், பண்பாட்டு அடையாளங்களை அறிந்தும் அறியாமலும் இழந்து வருகின்றனர். பல்லினக் கலாசாரம் கைவிடப்பட்டு ஒற்றைக் கலாசாரம் - ஆட்சியதிகாரவர்க்கத்தின் அடையாளங் களையே தமதடையாளங்களாக பெருமையுடன் ஏற்றுக்கொள்ளும் மனப்பாங்கு விருத்தியுற்று வருகின்றது. சமயம், கோயில் சார்ந்த அசைவியக்கமும் பௌதிகவிருத்தி, பிரமாண்டம், அலங்காரம் எனும் தளங்களினூடே அதிகாரத் தளத்தினூடு பயணிக்கிறது. ஆன்மீக விருத்தி வலுவிழந்து வருகிறது. இத்தகைய உலகமயமாதற் சூழலில் பெருந்தொற்றாகிய கொரோனா, உலக நாடுகளை உலுக்கி வருகின்றது. சமூக, பொருளாதார, அரசியல், பண்பாட்டு நெருக் கடிகளை அது ஏற்படுத்தி வருகின்றது. பொதுமுடக்கம் தரும் உளநெருக்கீடு மனிதர்களைப் பெரிதும் பாதித்துள்ளது. இத்தகைய சூழலில் சமயவியற் தளத்தில் ஆலயத்திருவிழாக்களின் முக்கியத்துவம் அவற்றின் பொருளாதார, சமூக, ஆன்மீகப் பெறுமானம், உளஆற்றுகை என்பன பெரிதும் உணரப்படுகின்றன. கொரோனா ஆலயத்திருவிழாக்கள் தரக்கூடிய பொருளாதார, ஆன்மீக நலன்களோடு உளஆற்றுகை கூட்டுணைவு, மனித விழுமியங்கள், கலைவளர்ச்சி பண்பாட்டு நீட்சி என்பவற்றையும் சிதைத்துள்ளது. இத்தகைய சூழலில் தன் மரபில் இருந்து வழுவாப்பண்பு கொண்ட நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்திருவிழாக் களில் பல்வேறு மாற்றங்களையும் சமரசங் களையும் அவதானிக்க முடிகின்றது. சமூக இயங்கியலுக்கு சற்றேனும் இசைந்து கொடாதவை தம் அடை யாளத்தைத் முற்றாகத் தொலைத்து விடும் அபாயம் இருப்பதை உணர்ந்து செயற்பட்ட தாகவே இதனை அர்த்தப்படுத்திக் கொள்ள முடிகிறது. அதேவேளை இவ்வாலயம் தன்னிலையை முற்றாக இழக்கவில்லை என்பதும் அவசியம் செய்ய வேண்டிய மாற்றங்களை மட்டுமே செய்துள்ளமையும் அவதானிக்க

முடிகிறது. அதேவேளை தன்னதிகாரத் தன்னிலைப்படுத்தும் ஒழுங்கு முறைமையை ஆடை அலங்காரத்திலும் பிராமணமயமாக்கலிலும் செய்துள்ளமை கவனத்தைக்கோருகிறது. உலகமய மாக்கலின் வழி தன்னிலையிழத்தல், தன்னடையாளம் தொலைத்தல் என்பன தரக்கூடிய பல்வகை நெருக்கீடுகளை மக்கள் உணர்ந்து கொள்ளும் ஒரு தக்க சந்தர்ப்பமாகவே கொரோனாக்காலம் அமைந்துள்ளது.

உசாத்துணை நூல்கள்


வில்டியூரெண்ட். (2008). உலகமதங்கள் ஒரு தத்துவப்பார்வை. நியூசெஞ்சுரிபுக் ஹவுஸ்.சென்னை.

பக்தவத்சல பாரதி. (2015). தமிழர் மானிடவியல். அடையாளம் பதிப்பகம. திருச்சி.

பரமசிவன்.தொ. சுந்தர்காளி. (2008).சமயம். தென்திசை பதிப்பகம. சென்னை

பரமசிவன்.தொ.(2016). சமயங்களின் அரசியல். விகடன் பிரசுரம. சென்னை.


கட்டுரைகள்


யனுதாஞ்சலி.பா. மகேஸ்வரநாதன். எஸ். 2020. ‘உலகமயமாக்கலில் கொவிட் - 19இன் தாக்கம். கூர்மை இதழ். இல. 02. பொருளியல் துறை. கிழக்குப்பல்கலைக்கழகம். மட்டக்களப்பு.

முத்துமோகன்.ந.2017. ‘அறிவின் உலகமயமாக்கலும் அறிவுச் சமூகங்கள் பண்பாட்டில் வேர்கொள்ளல் எனும் தேவையும்’.மொழிதல். மட்டக்களப்பு.

பாண்டி மு.2019. ‘தமிழரின் வழிபாடுகளில் மரபு நீட்சி’.சான்லாக்ஸ். பன்னாட்டு ஆய்விதழ். மலர் - 03. இதழ் 4 .


இணையத்தள முகவரி

https: //telegram.me/aedahamlibary.